

# எழுப்புதல் தொனி

**EZHUPUTHAL THONI**

தனிப்பிரதி: ₹ 5/- | ஆண்டு சந்தா: ₹ 60/-

Per Copy: ₹ 5/- | Annual subscription: ₹ 60/-

# ஒருமனப்பாடிருந்தால்..!

மலர்: 19 | Volume: 19    அக்டோபர் 2023 | October 2023    இதழ்: 6 | Issue: 6








படுவா பணித்தளத்தில் உள்ள கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கும் நமது சுவிசேஷ குழுவினர்.



# உங்கள் சகோதரனிடமிருந்து...



இரட்சகர் இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துகள்.

பிரியமானவர்களே, தேவனுடைய பெரிதான கிருபையினாலும் இரக்கத்தினாலும் இந்த மாதத்திலும் பத்திரிக்கை மூலமாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். வருடம் துவங்கியது போல இருந்தது. ஆனால் ஒன்பது மாதங்களை நாம் கடந்து விட்டோம். கண்ணை இமை காப்பது போல இதுவரை காத்த தேவன் இன்னமும் காத்து நடத்துவார் என்பதில் சந்தேகமில்லை.

எதைக் குறித்தும் கலங்காதிருங்கள். ஏனென்றால், சொந்தக் குமாரனென்றும் பாராமல் உங்களுக்காக சிலுவையில் கொடிய மரணத்திற்கு ஒப்புக்கொடுத்த தேவன் அவர் மூலமாக எல்லாவற்றையும் உங்களுக்கு கொடுக்க போதுமானவர். ஆகவே, நீங்கள் ஜெபம்பண்ணும் போது விசுவாசத்தோடு கேட்க வேண்டும்.

நம்முடைய ஒடிசா மாநில பணித்தளத்திலிருந்துதான் இந்தக் கடிதத்தை எழுதிக்கொண்டிருக்கிறேன். தற்போது இங்கு அதிகமாக மழை பெய்து வருகிறது. அதினால் சுவிசேஷ வேலைகள் மெதுவாய் நடைபெறுகிறது. மிஷனெரிகளோடு தற்போது ஆங்காங்கே கூடி ஒடிசாவின் எழுப்புதலுக்காகவும் இரட்சிப்பிற்காகவும் ஜெபம்பண்ணி வருகிறோம்.

உங்கள் ஜெபங்களில் எங்களை நினைத்துக்கொள்ளுங்கள். நான் உங்களுக்காக நம்முடைய கல்வாரி குடும்பத்தோடு இணைந்து கருத்தாய் ஜெபித்து வருகிறேன். தேவனுடைய கிருபையும் சமாதானமும் உங்களில் அதிகமாய்ப் பெருகுவதாக!

எழுப்புதல் பணியில்,

**(T.ஆசீர் ஞானராஜ்)**

வங்கியின் மூலமாக பணம் அனுப்பும்போது தயவுசெய்து எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
**96294 99532**

24 மணி நேர ஜெப உதவிக்காக:
**94869 19522, 81909 25800**
ஊழிய விபரங்களுக்கு: 96294 99532
Email: calvarygospelmm@gmail.com

Follow us youtube channel:
**Asir Gnanaraj**

https://www.youtube.com/channel/UCOKkrVUWceMTwtC2dKOl4zg (or)




**தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப்போம்; தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த பட்டணமும் எந்த வீடும் நிலைநிற்கமாட்டாது. – மத்.12:25.**

## தீர்க்கதரிசன செய்தி: சகோ. T.ஆசீர் ஞானராஜ்

பிரியமானவர்களே, சில குடும்பத்தில் பார்த்தோமானால் அவர்களிடத்தில் ஒருமனப்பாட்டை நாம் பார்க்கவே முடியாது. சில குடும்பங்களில் ஒருமனப்பாட்டின் ஜெபத்திற்கான சமயமே இல்லாமல் இருப்பார்கள். ஆனால் ஆதியிலே தேவன் குடும்பத்தை என்ன விதமாய் உருவாக்கினார்? முதல் குடும்பத்தை உண்டாக்கின போது அந்த குடும்பம் பகலின் குளிர்ச்சியான நேரத்திலே தோட்டத்தில் உலாவுகிற தேவனுடைய சத்தத்தைக் கேட்டார்கள். உங்கள் குடும்பத்தில் ஆண்டவர் உலாவுகிற சத்தத்தை நீங்கள் கேட்க வேண்டும். உங்கள் குடும்பம் தேவனுடைய சத்தத்தைக் கேட்கக் கூடிய குடும்பமாய் இருக்க வேண்டும். தேவசத்தத்தைக் கேட்பது என்பது கடினமான காரியம் அல்ல. பேதைகளானாலும் திசைகெட்டுப் போவதில்லை. குருடனைக் கூட அவன் அறியாத இடத்திலே அவனை கரம்பிடித்து நான் நடத்துவேன் என்று ஆண்டவர் சொல்லுகிறார். ஆண்டவர்

நம்முடைய குடும்பத்திலே உலாவ விரும்புகிறார். ஆண்டவர் ஒரு குடும்பத்திலே உலாவ வேண்டுமானால் அந்த குடும்பத்தில் உள்ள எல்லாரும் ஒரு மனப்பட்டவர்களாய் அனுதினமும் தேவனுடைய சமூகத்தை வாஞ்சித்து காத்திருக்க வேண்டும். அப்பொழுது ஆண்டவர் இனி குடும்பத்தில் சம்பவிக்கக் கூடிய நன்மை தீமைகளை தரிசனத்தின் மூலமாக அவர்களிடத்திலே வெளிப்படுத்தக் கூடியவராக இருக்கிறார். நாம் ஆராதிக்கிற தேவன் பேசும் தெய்வமாக இருக்கிறார். நாம் தேவனுடைய சத்தத்தை கவனிக்க வேண்டும். ஆண்டவர் முதல் குடும்பத்தை உருவாக்கின நாளிலே அவர்கள் தேவனுடைய சத்தத்தைக் கேட்டார்கள். தேவனுக்கு துரோகம் செய்த காலத்திலே அந்த குடும்பம் பின்வாங்கிப் போனது. எப்படியென்றால் அந்த முதல் குடும்பம் ஒருமனப்பாட்டினை முதலாவது மீறினார்கள். இரண்டாவது தேவனுடைய கட்டளையை மறந்தார்கள். தேவனுக்கு விரோதமான பாவம் செய்யும்படி சாத்தானால் அவர்கள் வஞ்சிக்கப்பட்டார்கள். அந்த முதல் குடும்பத்திற்குள்ளே தேவ கட்டளையை மீறும்படி அந்த முதல் குடும்பத்தை உடைக்கும்படிக்கு தேவனை விட்டு பிரிக்கும்படிக்கு சாத்தான் செய்த மிக முக்கியமான வேலை என்னவென்றால் கணவன் மனைவிக்குள் இருக்கிற ஒருமனப்பாட்டை உடைத்ததுதான். ஏதேனிலே ஏராளமான பழ விருட்சங்களை தேவன் உருவாக்கினார். தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியை மாத்திரம் நீங்கள் புசிக்கக் கூடாது. அதை புசிக்கும் நாளிலே நீங்கள் சாகவே சாவீர்கள் என்று தேவன் கட்டளையிட்டார். ஆனால் ஆதாமை விட்டு ஏவாள் பிரிந்து நடக்கத் துவங்கினாள். ஆதாமினுடைய அனுமதி இல்லாமல் ஆதாமிற்கு பிரியமில்லாத இடத்திற்கு சென்று தேவனுடைய கட்டளையை மீறி ஏவாள் தனிமையாக சுற்றித்திரிய ஆரம்பித்தாள். அவள் இப்படி தனிமையாய் சுற்றித்திரியத் துவங்கியபோதுதான் ஆண்டவர் விலக்கிய விருட்சத்தின் கனி மிகவும் மேன்மையாக தெரிந்தது. எத்தனையோ கனி விருட்சங்களை உண்டாக்கி கொடுத்ததில் அவள் திருப்தியில்லாமல் புசிக்க விலக்கின ஒரே ஒரு கனியின் மீது அவள் இருதயம் பதிவதை நாம் பார்க்கிறோம். ஆதாமும் ஏவாளும் அந்த விருட்சத்தின் கனியை புசிக்கவில்லை. ஏவாள் சாத்தானால் முந்தி வஞ்சிக்கப்பட்டாள். அவள் புருஷனை விட்டு பிரிந்திருந்ததினால் அவள் சாத்தானால் சுலபமாக வஞ்சிக்கப்பட்டதை நாம் பார்க்கிறோம். ஒரு குடும்பத்திற்குள்ளே பாவத்தையோ, சாபத்தையோ, வியாதியையோ அல்லது தரித்திரத்தையோ சாத்தான் கொண்டு வருவதற்கு முன்பாக முதலாவது குடும்ப ஜெபத்தை உடைக்க சாத்தான் சதிசெய்வான். அந்த

குடும்பத்தில் உள்ள ஐக்கியத்தை உடைத்துப் போடுவான். அதற்கு பின்பு ஒவ்வொன்றாக சாத்தான் தன்னுடைய இஷ்டப்படி அவன் நினைத்ததை சாதிக்கத் துவங்குவான். எங்கு நம்முடைய வாழ்க்கையில் வீழ்ச்சி வந்திருக்கிறது எங்கே நமக்குஇழப்பு நஷ்டங்கள் வேதனைகள் வந்திருக்கிறது என்று பார்த்தால் நம்முடைய குடும்ப ஜெபம் அல்லது ஐக்கியம் என்ற பகுதியிலே முதலாவது சாத்தானாலே வஞ்சிக்கப்பட்டு அங்கே வீழ்ச்சியடைந்திருப்போம். குடும்பத்தினை தேவன் எப்படி அமைத்திருக்கிறாரென்றால் முதலாவது குடும்பத்திலே ஆண்டவர் தலைவனை உண்டாக்கினார்.அந்ததலைவன் புருஷனாய் இருக்கிறான். ***ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும் ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறானென்றும், கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாயிருக்கிறாரென்றும், நீங்கள் அறிய வேண்டுமென்று விரும்புகிறேன். – 1கொரி.11:3*** அந்த புருஷனுடைய ஆலோசனைக்கு முழு குடும்பமும் கீழ்ப்படிய வேண்டும். ஒருவேளை குடிகார கணவனாய் இருந்தால் கீழ்ப்படிய முடியாது. அவன் அனைத்தையும் சாராய கடைக்கு கொண்டு செல்வான். ஆண்டவர் சொன்ன தலைவன் யார்? பரிசுத்த ஆவியை பெற்ற மனிதன். குடும்பத்திற்கு தேவன் நியமித்த ஒரு தலைவன் துன்மார்க்கன் அல்ல. அவன் ஒரு நீதிமான். ஆண்டவருடைய இரத்தத்தினாலே கழுவப்பட்ட ஒரு மனிதன். இரட்சிக்கப்பட்ட மனிதன். தேவனுக்கு பயப்படுகிற ஒரு மனிதன் அந்த மனிதனைத்தான் தேவன் குடும்பத்திற்கு தலைமையாக நிறுத்துகிறார். அங்கே தேவனுடைய சத்தமும் ஆலோசனையும் இருக்கிறது. அவனிடத்திலே தரிசனமும் திட்டமும் இருக்கிறது. அதற்கு முழு குடும்பமும் கீழ்ப்படிய வேண்டும். சில குடும்பத்திலே தகப்பனையும் பிள்ளைகளையும் பிரிக்கிற விதமாக மனைவிமார்


WANTED

## முன்னேற்றப் பணியாளர்கள் தேவை

அர்ப்பணிப்புள்ள ஊழியஞ்செய்ய

வாஞ்சையுள்ள சகோதர சகோதரிகள் தேவை.

முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.

தொடர்புக்கு: 9486588270,9486919522.

செயல்படுவார்கள். சில வீடுகளில் கணவன்மார் செயல்படுவார்கள். அம்மா சொல்வதை நீ கேட்கக் கூடாது. இல்லையென்றால் அப்பா சொல்வதை நீ கேட்க கூடாது என்று சொல்லுவார்கள். சில நேரங்களில் தாயாரும், பிள்ளைகளும் சேர்ந்து குடும்பத்தலைவரை ஏமாற்ற நினைப்பார்கள். பணகாரியமானாலும் வேறு சில காரியமானாலும் ஏமாற்ற நினைப்பார்கள். பிள்ளைகளுக்கு பாவம் செய்ய இதன் மூலமாக கற்றுக்கொடுக்கிறோம். ஒன்றுமே அறியாத பிள்ளைகள் இருதயத்தில் நாம் பாவத்தை கொண்டு செல்கிறோம். தகப்பனை விட்டு தாயை விட்டு பிள்ளைகளைப் பிரிக்கிற காரியமெல்லாம் பிசாசினால் உண்டானது. நீங்கள் பெயரளவில் குடும்பமாக ஜெபிக்க உட்கார்ந்திருப்பது காரியமல்ல. இருதயத்தில் ஒருமனப்பாடு காணப்பட வேண்டும். ஒரு குடும்பத்தை தேவன் உண்டாக்கின நியமத்தின்படியே அந்த குடும்பத்தின் புருஷனுக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். பிள்ளைகளை வேறு விதமாக தகப்பனோ அல்லது தாயோ கொண்டு செல்ல கூடாது. இப்படி தகப்பன் அல்லது தாய் பிள்ளைகளுக்குள் பிரிவினையை உண்டாக்கி, சாத்தானுக்கு வழியை திறந்து விடக்கூடாது. இதில் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். ஆசீர்வாதத்தை பெற்ற முதல் குடும்பத்தில் புருஷனுக்கு தெரியாமல் ஒரு பிரயாணத்தை ஏவாள் செய்ததை நாம் பார்க்கிறோம். அவனுக்கு தெரியாமலே போகிறாள். அவனுக்கு தெரியாமல் ஒரு நட்பு இருக்கிறது. அது ஒரு சர்ப்பம். அதற்கு பின்னாக இருப்பது சாத்தான். அதனோடு பேசுகிறாள். அது அவளுக்கு ஆலோசனை கொடுக்கிறது. இங்கு ஒரு பக்கம் இப்படி தவறான காரியங்கள் நடந்து கொண்டிருக்கிறது. புருஷனுக்கு மறைவான தொடர்பு என்று சொல்லவில்லை. எந்தவிதமான சிறிய காரியமானாலும் கணவன் மனைவிக்கு இடையில் பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்கும் இடையில் எந்த வித ஒளிவுமறைவு இல்லாமல் இருக்க வேண்டும். சில வீடுகளில் தன்னுடைய அலைபேசியில் லாக் போட்டு வைத்திருப்பார்கள். யாருடையதும் யாருக்கும் தெரிய கூடாது என்று நினைக்கும் போதே அங்கு உள்ளுக்குள் பாவம் வந்து விடுகிறது.

இயேசு ஒரு குடும்பத்தில் இருக்க வேண்டுமென்றால், நாம் இயேசுவோடு கூட இருந்தால் தான் அவர் நம்மோடு கூட இருப்பார். நாம் அவரை விட்டு விட்டால் அவரும் நம்மை விட்டு விடுவார். இயேசுவோடு கூட இருக்கிற ஒரு அனுபவம் அது தான் குடும்ப ஜெபம். ஒரு கட்டுக்கோப்பான குடும்ப ஜெப நேரத்தில் யாரும் படுக்கையில் இருக்கக் கூடாது. கட்டாயமாக எல்லாரும் எழும்பியாக வேண்டும். ஒவ்வொரு நாளும் குறித்த நேரத்தில் நாம் ஐக்கியப்பட்டு ஒருமனப்பாடோடு ஜெபிக்கிற ஜெபத்தின் மூலமாகத்தான்

*கர்த்தர் நம்மை நாம் செய்து வருகிற வியாபாரத்தை ஆசீர்வதிக்க முடியும்.*

ஒரு சில ஆண்டுகளுக்கு முன் ஜெபம் பண்ணும்படியாக ஒரு குடும்பத்தார் என்னை அழைத்திருந்தார்கள். அப்பொழுது அவசர அவசரமாக நான் சென்றேன். ஏனென்றால், அவர்களை சந்தித்துவிட்டு நான் ஊழியத்திற்காக செல்ல வேண்டும். ஊழியத்திற்கு கொண்டு போக வேண்டிய துணிப்பையோடு கூட அங்கு சென்றேன். அவர்கள் வீடு மிகவும் பெரிய வீடு அந்த வீட்டின் பின் பகுதியில் சமையல் அறை உள்ளது. அது மதிய நேரம். அந்த தாயாருடைய வாலிப மகள் உள்ளே இருக்கிறாள். நான் அவளைப் பார்த்த போது அவள் வாருங்கள் நன்றாக இருக்கிறீர்களா என்று நலம் விசாரித்தாள். அதன் பின்பு அவள் உள்ளே சென்று விட்டாள். நான் என்னுடைய கைக்கடிகாரத்தை பார்த்தவாறு இருக்கிறேன். யாரும் உள்ளே இருந்து வெளியே வரவில்லை. எனக்கு ஊழியத்திற்கு செல்ல நேரமாகிக்கொண்டிருக்கிறது. அந்த வாலிப மகள் திடீரென்று வெளியே வந்தாள். அவளிடம் நான் வந்திருப்பதை அம்மாவிடம் தெரியப்படுத்தினாயா என்று கேட்டேன். இல்லையே நான் சொல்லவில்லை என்று பதிலளித்தாள். அம்மா எங்கு இருக்கிறார்கள் என்று கேட்டேன் அவளோ அம்மா சமையலறையில் இருப்பதாக பதிலளித்தாள். அம்மாவிடம் சென்று நான் வந்திருப்பதாக சொல் என்று சொன்னேன். அவள் இல்லை என்னால் சொல்ல முடியாது என்று பதிலளித்தாள். ஏன் என்று நான் கேட்ட போது என் அம்மாவிடம் நான் ஒன்றரை வருடங்களாக பேச மாட்டேன் என்று சொன்னாள். சரி நீ பேச வேண்டாம் உன் அம்மாவிடம் அன்பை பகிர்ந்து கொள்ள வேண்டாம். ஏதோ வேற்று ஆளிடம் சொல்வது போல சொல்லிவிட்டு வா எனக்கு நேரமாகின்றது நான் ஊழியத்திற்கு போக வேண்டும் என்று சொன்ன போது அவள் என்னிடம் நான் அப்படி எல்லாம் பேச மாட்டேன் என்று பதிலளித்தாள். எனக்கு மிகவும் துக்கமாக இருந்தது. நான் வந்திருப்பது அவர்களுக்கு தெரியாத காரணத்தினால் அவர்கள் வெளியே வரவும் இல்லை. அரை மணி நேரம் காத்திருந்து மறுபடியும் வெறுமையாய் அங்கிருந்து திரும்பி வந்தேன். ஒரு சில ஆண்டுகள் கடந்தது. அந்த குடும்பம் அப்படியே சிதறடிக்கப்பட்டுப் போயிற்று. முழுவதும் உடைந்து போனது. கணவன் மனைவிக்குள் பிரிவு. பெற்றோர் பிள்ளைகளுக்குள் பிரிவு. பிள்ளைகள் தானாக துணையைத் தேர்ந்தெடுத்தார்கள். அந்த குடும்பம் முழுவதுமாய் சூனியமாய் போனது கடைசியாக அவர்கள் இருப்பிடத்தையே விற்பனை செய்யக் கூடிய சூழ்நிலைக்கு வந்து சிதறடிக்கப்பட்டு போனார்கள்.

*தனக்குத்தானே பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பட்டணமும் குடும்பமும் பாழாய்ப் போகும். ஒருமனம் என்பது மிகவும் முக்கியமானது. அந்த ஒருமனப்பாட்டிலே முதல் குடும்பம் தவறியதினாலே அவர்கள் பல வேதனைகளை சந்தித்ததை நாம் பார்க்கிறோம்.*

முதலாவது தேவன் விலக்கின விருட்சத்தின் கனியை ஏவாள் பறித்தாள். அவள் புசித்தாள் அதை அவள் புருஷனுக்கும் கொடுத்தாள். நீ ஏவாளுடைய வார்த்தைக்கு செவிகொடுத்தபடியினாலே என்று ஆதாமை சபிக்கும் போது ஆண்டவர் சொல்வதை நாம் பார்க்கிறோம். அப்படி மனைவியின் வார்த்தையை கேட்கக் கூடாது என்று ஆண்டவர் சொல்லவில்லை. மனைவி சொல்லக் கூடிய நல்ல வார்த்தைகளை கணவனும், கணவன் சொல்லக் கூடிய நல்ல வார்த்தைகளை மனைவியும் கேட்க வேண்டும். அதுதான் ஒரு குடும்பத்தின் ஒழுங்கு. அது தான் ஆண்டவர் ஏற்படுத்தி வைத்த விதம். ஏவாள் அந்த பழத்தை பறித்தாள். புசித்தாள். நான் சாப்பிட்டேன் மிகவும் சுவையாக இருக்கிறது. இதை இவ்வளவு காலம் ஆண்டவர் வேண்டாம் என்று விலக்கி வைத்து விட்டார். இப்பொழுது புசியுங்கள் என்று சொன்ன போது அவனுடைய உள்ளத்தில் தேவனுடைய சத்தம் ஒலிக்கிறது. இந்த விருட்சத்தின் கனியை புசிக்கும் நாளிலே சாகவே சாவீர்கள் என்று கேட்கிறது. இங்கு ஒரு சத்தம் கேட்கிறதுஇந்த கனியை சாப்பிடுங்கள் என்று ஏவாள் சொல்கிறாள். ஆனால் ஆதாம் தேவனுடைய சத்தத்தை அலட்சியம் பண்ணி ஏவாளுடைய சத்தத்திற்கு கீழ்ப்படிந்தான். ஆதாம் அந்த இடத்திலே ஒரு வைராக்கியத்தை காண்பித்திருந்தால் ஐயோ இப்படி மீறிவிட்டாயே என்று அவளை எச்சரித்து ஒருவேளை ஒருமனப்பட்டு அல்லது ஏவாளுக்காக ஆதாம் தேவ சமூகத்திலே திறப்பிலே நின்றிருப்பானேயானால் முதல் குடும்பத்திற்குள்ளே பாவமோ சாபமோ அல்லது தரித்திரமோ நிச்சயமாய் வந்திருக்கவே முடியாது. அங்கே இருவரும் மோசம் போய்விட்டார்கள். இப்பொழுது குடும்பத்திலே ஒரு உறுப்பினராய் இருந்த ஆண்டவரை விலக்கி அவருடைய வார்த்தையை விலக்கி தேவனுடைய கட்டளையை மீற ஒருமனப்பட்டார்கள். அங்கே பாவம் உள்ளே வந்தது. அந்த வளமான ஏதேனை விட்டு அவர்கள் அடித்து துரத்தப்பட்டார்கள். அதற்குள்ளே இனி வராதபடிக்கு அங்கே தூதனை காவலுக்கு வைத்தார். சுடரொளி பட்டயத்தை அங்கே வைத்து அவர்களை குருட்டாட்டம் பிடிக்க வைத்தார். வளமான, செழிப்பான, ஆசீர்வாதமான, சமாதானமான, ஆரோக்கியமான சூழ்நிலையிலிருந்து அவர்கள் வெளியே துரத்தி விடப்பட்டதை நாம் பார்க்கிறோம்.

அதனால் அந்த குடும்பத்திற்குள் என்ன நடந்தது? தேவன் அந்த குடும்பத்திற்கு இரண்டு குமாரர்களைக் கொடுத்தார். அந்த இரண்டு குமாரர்களுடைய வாழ்க்கையில்ஒருமனப்பாடு இல்லை. ஒருமனப்பாடு இல்லாததால் ஆபேலுக்கு விரோதமாக காயீன் எழும்பி

அவனைக் கொலை செய்தான். முதலாவது குற்றமில்லாத இரத்தம் தேசத்திலே சிந்தப்பட்டது. இன்றைக்கு உள்ள சூழ்நிலையை பாருங்கள். தான் பெற்றெடுத்த பிள்ளையை ஒரு தாய் பாவத்தின் நிமித்தமாக கழுத்தை நெரித்து கொன்று போடுகிறாள். கிணற்றிலே தூக்கி வீசுகிறாள். இதெல்லாம் எங்கிருந்து உருவானது? ஆதியிலே முதல் குடும்பம் ஒருமனப்பாடு இல்லாமல் தன்னிச்சையாக செயல்பட்டு அவர்கள் தேவனுக்கு விரோதமாக பாவத்தை செய்ததினிமித்தமாக அந்த குடும்பத்திற்குள்ளே கர்த்தருடைய கோபாக்கினை வந்தது. வழிவழியாக அதே சூழ்நிலை அந்த வீட்டிற்குள் உருவானது. பொறாமையின் நிமித்தமாக காயீன் எழும்பி ஆபேலைக் கொலை செய்தான். முதல் குடும்பம் ஆசீர்வாதமாக இருக்கும்படியாய் ஆண்டவர் ஏற்படுத்தி அவர்களை ஆசீர்வதித்தார். நீங்கள் பலுகிப் பெருகுங்கள். நீங்கள் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். எல்லாவற்றையும் ஆண்டு கீழ்ப்படுத்துங்கள் என்ற வாக்குத்தத்தத்தையும் அதிகாரத்தையும் கொடுத்தார். ஆனால் ஒருமனப்பாடில்லாமல் பிரிவினையாக அவர்கள் செயல்பட்டதினாலே முழுக்குடும்பமும் பாதிக்கப்பட்டு இரண்டு பிள்ளைகளில் ஒருவன் எழும்பி மற்றொருவனை கொலை செய்கிறான். அந்த தாய் தகப்பனுக்கு எவ்வளவு துக்கம் இருந்திருக்கும் பாருங்கள்! ஒரு பிள்ளை எழும்பி மற்றொரு பிள்ளையை கொலை செய்வதை பெற்றோர் பார்க்கும் போது அது எவ்வளவு பெரிய வேதனையாய் இருக்கும். அந்த கொடிய வேதனையை முதல் குடும்பம் அனுபவித்தது. இதற்கெல்லாம் காரணம் என்ன? குடும்பத்திற்குள் ஒருமனப்பாடு இல்லாமல் போனதுதான். தனக்குத்தானே பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் எந்த பட்டணமும் பாழாய்ப்போகும். ஒரு குடும்பத்திற்குள்ளே மன்னிக்கக் கூடிய அனுபவம் வேண்டும்.

ஒருவரை ஒருவர் மன்னிக்க வேண்டும். தவறுகள் மனிதர்களுடைய வாழ்க்கையில் வரும். வார்த்தை மீறுதல்கள் மனிதனுடைய வாழ்க்கையில் வரும். ஆனால் அதை அப்படியே வைத்துக்கொண்டிருக்கக் கூடாது. அதை மன்னிக்கிற விட்டுக்கொடுக்கிற நல்ல அனுபவம் வேண்டும். அந்த அனுபவம் கணவன் மனைவிக்குள் வரும் போது அதை பார்க்கிற பிள்ளைகளும் அப்படியே உருவாக்கப்படுவார்கள். பிள்ளைகளைப் பார்த்து ஜெபம் பண்ணு வேதம் வாசி என்று கட்டாயப்படுத்த தேவையில்லை.

***. . . வேரானது பரிசுத்தமாயிருந்தால் கிளைகளும் பரிசுத்தமாயிருக்கும். – ரோமர் 11:16***

*நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாய் இருந்தால் உங்கள் பிள்ளைகளும் பரிசுத்தமுள்ளவர்களாய் இருப்பார்கள் என்று ஆண்டவர் சொல்லுகிறார்.*

ஈசாக்கு தான் வயது

சென்றவனான போது, தான் மரணமடையும் முன்னதாக தன் பிள்ளைகளை ஆசீர்வதிக்க விரும்பினான். அந்நாட்களில் உள்ள வழக்கத்தின்படியே ஈசாக்கு மூத்தவனாகிய ஏசாவை நோக்கி: ***நான் முதிர்வயதானேன், என் மரணம் இன்ன நாளில் என்று அறியேன். ஆகையால், நீ உன் ஆயுதங்களாகிய உன் அம்பறாத்தூணியையும் உன் வில்லையும் எடுத்துக்கொண்டு வனத்துக்குப் போய், எனக்காக வேட்டையாடி, அதை எனக்குப் பிரியமாயிருக்கிற ருசியுள்ள பதார்த்தங்களாகச் சமைத்து, நான் புசிக்கவும், நான் மரணமடையுமுன்னே என் ஆத்துமா உன்னை ஆசீர்வதிக்கவும், என்னிடத்தில் கொண்டு வா என்றான். ஈசாக்கு தன் குமாரனாகிய ஏசாவோடே பேசுகையில், ரெபேக்காள் கேட்டுக்கொண்டிருந்தாள். ஏசா வேட்டையாடிக் கொண்டு வரும்படி வனத்துக்குப் போனான். அப்பொழுது ரெபேக்காள் தன் குமாரனாகிய யாக்கோபை நோக்கி: உன் தகப்பன் உன் சகோதரனாகிய ஏசாவை அழைத்து: நான் புசித்து, எனக்கு மரணம் வருமுன்னே, கர்த்தரை முன்னிட்டு உன்னை ஆசீர்வதிக்கும்படி, நீ எனக்காக வேட்டையாடி, அதை எனக்கு ருசியுள்ள பதார்த்தங்களாகச் சமைத்துக் கொண்டு வா என்று சொல்லக் கேட்டேன். ஆகையால், என் மகனே, என் சொல்லைக் கேட்டு, நான் உனக்குக் கற்பிக்கிறபடி செய். நீ ஆட்டுமந்தைக்குப் போய், இரண்டு நல்ல வெள்ளாட்டுக்குட்டிகளைக் கொண்டு வா; நான் அவைகளை உன் தகப்பனுக்குப் பிரியமானபடி ருசியுள்ள பதார்த்தங்களாகச் சமைப்பேன். உன் தகப்பன் தாம் மரணமடையுமுன்னே உன்னை ஆசீர்வதிக்கும்படி அவர் புசிப்பதற்கு நீ அதை அவரிடத்தில் கொண்டு போக வேண்டும் என்றாள்.– ஆதி.27:2–10***

பிரியமானவர்களே, தன் தாயினுடைய தவறான ஆலோசனையைக் கேட்டு யாக்கோபு மாறுவேடம் கொண்டு ஏசாவின் ஆசீர்வாதத்தை அபகரித்தான். இதினிமித்தமாக ஏசாவுக்கும் யாக்கோபுக்கும் இடையிலே விரோதம் உண்டானது. பெற்றோராகிய நாம் ஒரு பிள்ளையை சிநேகித்து மற்றொரு பிள்ளையை பகைக்கக் கூடாது. காரணம் ஒரு இடத்தில் விரோதம் பகை உணர்வு இருக்குமானால் இதற்குப் பின்னாக சாத்தான் செயல்படுவான்.

**ஒரு குடும்பத்தாரை நான் அறிவேன். அவர்களுக்கு மூன்று ஆண்பிள்ளைகள் உண்டு. அந்தக் குடும்பத்தில் தாயும் தகப்பனும் மூத்த மகனுடைய வீட்டில் இருந்தார்கள். மற்ற இரண்டு பேரும் வெளியூரில் தொழில் செய்து கொண்டிருந்தார்கள். அந்த தகப்பனார் மரணத் தருவாயில் இருந்தார்கள். அவர் முற்றிலும் நினைவாற்றலை இழந்த போது, அந்த தாயாரும் மூத்த மகனும் சேர்ந்து, பதிவுத்துறை அதிகாரிகளின் உதவியோடு கைரேகையைப் பெற்று ஆஸ்திகள் எல்லாவற்றையும் மூத்தமகனின் பெயரில் மாற்றம் செய்து விட்டார்கள். சில நாட்களில் அந்த தகப்பனாரும் மரித்து போனார். இளைய சகோதரர்கள் இருவரும் மூத்த சகோதரனை**

**அதிகமாய் நேசித்தார்கள். பத்து ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு நாள் சொத்துக்களை நாம் பிரித்துவிடலாம் என்றார்கள். அப்பொழுது மூத்தவர் உங்களுக்கு என்று எந்த சொத்துக்களும் இல்லை. அப்பா எல்லா சொத்துகளையும் என் பெயரில் மாற்றம் செய்து கொடுத்துவிட்டார் என்று பொய் சொல்ல அந்த தாயாரும் அதற்கு உடைந்தையாயிருந்தார்கள். அதினிமித்தம் சகோதரர்களுக்குள்ளே பெரிய கலவரம் உண்டானது. இரத்த காயங்கள் உண்டாயின. அதன் மூலம் உண்டான வழக்குகள் நிமித்தமாக குடும்பத்திற்குள் மிகப்பெரிய சமாதானக்குறைவு உண்டானது.**

*ஆகவே, பெற்றோர்கள் பிள்ளைகள் மத்தியிலே பிரிவினையை உண்டாக்கக் கூடாது. குடும்பத்தை தேவனே உண்டாக்கிக் கொடுக்கிறார். எனவே குடும்பத்தை தேவனுடைய ஆலோசனைப்படி நடத்தும் போது பிள்ளைகள் மத்தியில் சமாதானம் ஆசீர்வாதம் உண்டாயிருக்கும். பிள்ளைகள் மரணத்திற்கு பின் பரலோகத்திற்கு செல்ல வேண்டுமே, நம்முடைய குடும்பத்தைக் குறித்து நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.*

*நீங்கள் ஒவ்வொரு காரியத்திலும் தவறு செய்யும் போது அதை பிள்ளைகள் பார்ப்பார்கள். அதைப்பார்க்கும் பிள்ளைகள் அதைவிடப்பெரிய பாவத்தை ஆண்டவருக்கு விரோதமாக செய்யத் துவங்குவார்கள். நீங்கள் வசனத்தின்படி நடக்கிறவர்களாய் இருந்தால் உங்கள் பிள்ளைகளும் சத்தியத்தின்படி நடக்கிறவர்களாய் இருப்பார்கள். நம்முடைய வாழ்க்கையில் மீறுதல்கள் வரும்போது நம் பிள்ளைகளுடைய வாழ்க்கையிலும் மீறுதல்கள் வருவதை நாம் பார்க்க முடியும்.*

**ஆண்டவருடைய பெரிதான கிருபையினாலே என்னுடைய பிள்ளைகளிடம் நீ இரட்சிக்கப்பட வேண்டும். நீ பாவத்தை விட்டு மனந்திரும்ப வேண்டும். இதை செய் இதை செய்யாதே என்று சொல்வதில்லை. ஒரு குறிப்பிட்ட வயது வரும்போது அவர்கள் தாங்களாகவே அதிகாலையில் எழுந்து ஜெபிப்பது வேதம் வாசிப்பது போன்ற பழக்கங்களை வைத்துக்கொண்டார்கள். குடும்ப ஜெபத்திலே கலந்து கொள்வார்கள். அது சரியாய் நடக்கும். காரணம் என்னவென்றால் பிள்ளைகள் என் மடியில் கிடக்கும் போதே என் கண்ணீரைப் பார்த்து வளர்ந்தவர்கள்.**

**நான் ஜெபிக்கும் போது பிள்ளைகளை என் மடியில் போட்டு தான் ஜெபிப்பேன். ஏனென்றால் என் மனைவி சமையல் வேலை செய்து கொண்டிருப்பாள். நான் எப்பொழுதும் அழுது தான் ஜெபிப்பேன். என் பிள்ளைகள் என் கண்ணீரிலே நனைந்து அவர்கள் வளர்க்கப்பட்டவர்கள்.**

**ஆகையால் அவர்களைப் பார்த்து நீங்கள் ஜெபம் பண்ணுங்கள் என்று சொல்ல வேண்டிய தேவையே இல்லை. அந்தந்த வயது வரும்போது அவர்களாகவே முழங்காலில் நின்று ஜெபிக்க ஆரம்பித்தார்கள். சின்ன வயதிலேயே இனி**

**சம்பவிக்கக் கூடிய காரியங்களை தரிசனத்திலே கண்டு அவர்கள் சொல்லும்படியாக ஒரு கிருபையின் சிலாக்கியத்தை ஆண்டவர் என்னுடைய குடும்பத்திற்குள்ளே கொண்டு வந்தார். அந்த தேவனுக்கே என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக!**

*குடும்பத்திற்குள்ளே ஒருமனம் என்பது மிகவும் முக்கியமான ஒரு காரியம். எந்தக் காரியத்தையும் ரகசியமாய் நாம் வைக்கக் கூடாது. கணவன் மனைவிக்குள், பெற்றோர் பிள்ளைகளுக்குள் ரகசியம், குடும்பத் தலைவருக்கு தெரியாமல் ஒரு காரியத்தை செய்வது போன்ற காரியங்கள் ஒரு குடும்பத்திற்குள்ளிருந்து வெளியேறும் போது நிச்சயமாகவே ஆண்டவர் ஆசீர்வாதத்தை அந்த குடும்பத்திற்குள்ளே கொண்டு வருவார்.*

*ஒரு குடும்பத்திலே ஒருமனப்பட்டு ஜெபிக்கும் போது அது மிகப்பெரிய வல்லமையான ஜெபமாக மாறும். ஒரு குடும்பமோ ஒரு சபையோ அல்லது ஒரு குழுவோ ஒருமனப்பட்டு ஜெபிக்கும் போது மிகப்பெரிய அற்புதங்களை அதிசயங்களை நிச்சயமாக பார்க்க முடியும். நெருக்கடியான காலங்கள் அல்லது தேவையுள்ள காலம் என எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்தாலும் ஒருமனப்பட்டு ஜெபிக்க வேண்டும். ஊழியத்தில் நெருக்கங்கள் பாடுகள் வரும்போது நாங்கள் ஒருமனப்பட்டு ஜெபம் செய்வோம்.*

*அந்த நாட்களில் ஏதாவது வழியிலே தரிசனத்திலே யாருக்காவது ஒருவருக்கு அதை தேவன் வெளிப்படுத்துவார். காரணம் நாம் கிறிஸ்துவுக்குள் அவயவங்களாக கர்த்தருக்குள் கூட்டிச் சேர்க்கப்பட்டிருக்கிறோம். அவரிடத்தில் யாதொரு வேற்றுமை நிழல் இல்லை.*

***அல்லாமலும், உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், இரண்டுபேராவது மூன்று பேராவது என் நாமத்தினால் எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார். – மத்.18:19,20***

*ஒருமனப்பட்டிருக்கிற இடங்களில் ஆண்டவர் நான் இருக்கிறேன் என்று சொல்லுகிறார். பிரிவினைக்கு ஏதுவான இடத்தில் சாத்தான் இருக்கிறான். ஒருமனப்பாடு இருக்கும் வீடு, சபை, சிறிய கூட்டம் போன்றவற்றில் நான் இருக்கிறேன் என்று ஆண்டவர் சொல்லுகிறார். முதலாவது ஒருமனப்பட்டு கேட்டால் நான் எதுவானாலும் கொடுப்பேன் என்று சொல்லுகிறார். ஒருமனப்பாட்டின் ஜெபம் வலிமையுள்ள ஜெபம். நம்முடைய வாழ்க்கையிலே தேவனிடத்திலே அநேக எதிர்பார்ப்புகள் இருக்கிறது. ஆனால் நிறைவேறவில்லை. அதற்கு காரணம் என்ன? ஒருமனப்பட்டு ஜெபிக்கிற ஒரு ஜெபம் இல்லை.*

நம்முடைய வீட்டிற்குள்ளே வெளிப்படையான வெளியரங்கமான ஆசீர்வாதத்தை தேவன் கொண்டு வருவதற்கு நாமே தடையாக காணப்படுகிறோம். ஒருமனப்பட்டு ஆண்டவருடைய சமூகத்தில் ஜெபிக்கும் போது அது எப்படிப்பட்ட காரியமாயிருந்தாலும் அதற்குள்ளே ஆண்டவர் கடந்து வந்து மிகப்பெரிய காரியத்தை செய்கிறார். பெரிய பெரிய மாற்றங்களை ஆண்டவர் கொண்டு வருகிறார்.

***அப்பொழுது சில மனுஷர் திமிர்வாதக்காரன் ஒருவனைப் படுக்கையோடு எடுத்துக்கொண்டு வந்து, அவனை உள்ளே கொண்டு போகவும் அவர் முன்பாக வைக்கவும் வகைதேடினார்கள். ஜனக்கூட்டம் மிகுதியாயிருந்தபடியால் அவனை உள்ளே கொண்டுபோகிறதற்கு வகைகாணாமல், வீட்டின்மேல் ஏறி, தட்டோடுகள் வழியாய் ஜனங்களின் மத்தியில் இயேசுவுக்கு முன்பாக அவனைப் படுக்கையோடே இறக்கினார்கள். அவர்களுடைய விசுவாசத்தை அவர் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி: மனுஷனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார். – லூக்கா 5: 18–20***

பிரியமானவர்களே, ஒரு மன ஜெபம் அதினோடு கூட நான்கு பேருடைய கிரியையைக் கண்டு இயேசு செய்த பெரிய அற்புதத்தை இந்த சம்பவம் விளக்குகிறது. ஒரு மனிதன் திமிர்வாதக்காரனாய் படுக்கையிலே இருக்கிறான். அதாவது வாதநோயிலே 64 விதமான நோய்கள் உண்டு என்று ஒரு சித்த மருத்துவர் சொல்ல நான் கேள்விப்பட்டேன்.

ஆனால் இந்த வியாதியஸ்தவன் சந்தித்த விதம் என்னவென்றால், அவனுடைய கை கால்கள் மற்றும் விரல்கள் எல்லாம் முடங்கிப்போய் படுத்த படுக்கையாக இருந்தான். ஒரு வேளை அவன் வியாதிப்பட்டதினால் அவனுக்கு ஆறுதல் சொல்ல அநேகர் வந்திருப்பார்கள். அவனுடைய நண்பர்கள், உறவினர்கள் அநேகர் வந்து அவனுக்கு ஆறுதல் சொல்லியிருப்பார்கள். இந்த விதமான சூழ்நிலையில் வந்ததில் நான்கு பேருடைய உள்ளத்தில் ஒரே விதமான சிந்தை உண்டானது. இவனைநாம் ஏன் இயேசுவிடம் கொண்டு செல்லக் கூடாது. இயேசு மரித்தோரை உயிரோடு எழுப்புகிறார். பிறவி சப்பாணியை எழுந்து நடக்கப்பண்ணுகிறார் என்ற விசுவாசமும் ஒரு மனமும் அவர்களுக்குள் உண்டானது. இயேசுவுக்கென எந்த முகவரியோ அல்லது இருப்பிடமோ நிரந்தரமாக குறிப்பிட்ட இடத்தில் கூட்டம் நடத்துவதோ எதுவுமில்லை. அப்படிப்பட்ட சுழ்நிலையில் குறிப்பிட்ட பட்டணத்தில் ஒரு வீட்டிற்கு இயேசு வந்ததை இந்த நான்கு பேரும் கேள்விப்பட்டு ஒரு மனப்பட்டு அவனைப் படுக்கையோடு சுமந்து கொண்டு போனார்கள்.

ஆனால் இயேசு இருக்கும் வீட்டைச் சுற்றிலும் திரளான ஜனங்கள் கூடியிருந்தார்கள். படுக்கையோடு வீட்டிற்குள் கூட்ட நெரிசல் மத்தியில்

*கொண்டு செல்ல இயலாது என்று அவர்கள் சோர்ந்து போகவில்லை.*

*அவர்கள் விடாமுயற்சியோடு கூட அந்த வீட்டின் மேலே படுக்கையோடு ஏறி வீட்டின் மேற் கூரையை பிரித்து இயேசுவுக்கு முன்பாக படுக்கையோடு கயிற்றை கட்டி இறக்கினார்கள். அந்த நான்கு பேரின் விசுவாசத்தையும் ஒரு மனத்தையும் இயேசு கண்டு திமிர்வாதக்காரனை பார்த்து உன் பாவம் உனக்கு மன்னிக்கப்பட்டது உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட என்றார். அப்பொழுது அவன் சுகமடைந்தான். நாம் எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் ஒரு மனப்பட்டு ஜெபம் பண்ணும் போது நிச்சயமாகவே அற்புதம் நடக்கும் என்பதில் சந்தேகமில்லை.*

**நம்முடைய ஊழியத்தின் ஆரம்ப காலத்திலே நமது ஒடிசா மாநில லம்டாபுட் பணித்தளத்திலே நான்கு மிஷனெரிகள் ஒரே வீட்டில் தங்கியிருந்து சுவிசேஷ வேலையை கிராமங்கள் தோறும் செய்து வந்தார்கள். அவர்கள் குறிப்பிட்ட ஒரு கிராமத்தில் சுவிசேஷத்தை அறிவித்துக்கொண்டிருந்த போது ஒரு மனிதன் அவர்களிடம் வந்து என் மகன் வியாதிப்பட்டு படுக்கையில் இருக்கிறான்.**

**நீங்கள் வந்து ஜெபம் பண்ண வேண்டுமென்று அழைத்தனர். அப்பொழுது நான்கு மிஷனெரிகளும் அவரின் பின்னாக அவருடைய வீட்டிற்குள் சென்று பார்த்தபோது முடக்குவாதத்தினாலே பாதிக்கப்பட்டு மருத்துவரால் கைவிடப்பட்ட நிலையில் இரண்டு ஆண்டுகளாக எழுந்து நடக்க முடியாத நிலையில் ஒரு வாலிபனைக் கண்டு இயேசுவை குறித்து சொல்லி ஜெபம் பண்ணினார்கள். அப்பொழுது அந்த கிராமத்தில் உள்ள ஜனங்களில் அநேகர் என்ன நடக்கிறது என்று பார்க்கும்படி கூடியிருக்கிறார்கள். அதில் சிலர் மிஷனெரிகளைப் பார்த்து இயேசு இவனை சுகப்படுத்தினால் நாங்கள் கிராமம் முழுவதுமாக இயேசுவை ஏற்றுக்கொள்ளுவோம் என்று சொன்னார்கள். அப்பொழுது நமது மிஷனெரிகள் இடைவிடாமல் ஒரு மனப்பட்டு சில நாட்கள் ஜெபித்தார்கள். அதில் இரண்டு மிஷனெரிகள் தினமும் நான்கு கிலோமீட்டர் நடந்து அவன் வீட்டிற்கு சென்று ஜெபித்து விட்டு வந்தார்கள்.**

**முதலாவது அவன் குடும்பத்தார் இரட்சிக்கப்பட்டார்கள். இரண்டு மாதங்களில் அவன் எழுந்து நடந்தான். அவனுடைய சகோதரன் மனந்திரும்பி ஊழியக்காரனாய் மாறினான். அந்த கிராமத்தில் இதைக் கண்டு அநேகர் மனந்திரும்பினார்கள். இன்று அந்த கிராமத்தில் ஒரு ஆலயம் கட்டப்பட்டுள்ளது.**

*பிரியமானவர்களே, நீங்கள் ஒருமனப்பட்டு ஜெபிக்கும்போது தேவன் பெரிய காரியத்தை செய்வார். உங்கள் குடும்பத்தில் ஒரு மனம் உண்டாகும் போது சாத்தான் உங்கள் வீட்டை விட்டு தொழில் ஸ்தலத்தை விட்டு ஓடிப்போவான். தேவனாகிய கர்த்தர் உங்கள் நடுவிலே உலாவுகிற சத்தத்தைக் கேட்பீர்கள்.* **அவர் உங்களை அதிசயமாக வழி நடத்துவதைக் காண்பீர்கள்.**

# பணித்தளச் செய்திகள்

## ஓடிசா மாநிலம்

### மல்கன்கிரி மாவட்டம் சித்ரகோண்டா பணித்தளம்

- சங்கீதா கிலோ என்ற சகோதரிக்கு சுகப்பிரசவம் மூலமாக ஒரு பெண் குழந்தையை பெற்றெடுக்க கர்த்தர் கிருபை செய்தார்.
- தினாமணி பத்ரா என்ற தாயாருக்காக ஜெபித்தோம். இப்போது சுகமாக இருக்கிறார்கள். தேவனுக்கே மகிமை.
- ரபி ஹந்தால் என்பவருக்கு காய்ச்சல் உள்ளது. இவரின் சுகத்திற்காக ஜெபியுங்கள்.
- பரமேஸ்வர ஹந்தால் என்ற 18 வயது வாலிப சகோதரன் முன்பு என்னோடு இணைந்து ஊழியத்திற்கு வருவான். இப்போது கெட்ட நண்பர்களோடு இணைந்து கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளான். இவனது பெற்றோர் இவன் இந்த தொழிலை விட்டுவிடவும் இரட்சிக்கப்படவும் ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளனர். இவனது இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள்.
- குத்துனர் ஹந்தால் என்ற சகோதரனுக்கு மூன்று பிள்ளைகள் மற்றும் ஒரு மகன் உள்ளனர். இப்போது மனைவியுடன் சண்டை போட்டுவிட்டு வேறு பெண்ணுடன் தொடர்பில் உள்ளார். இவரது மனமாற்றத்திற்காக ஜெபியுங்கள்.
- சுஜிதா கோரா (7வயது) என்ற மகளுடைய கால்களில் புண்கள் உள்ளது. இது ஆறவில்லை. இவளது சுகத்திற்காக ஜெபியுங்கள்.
- சலோன் கிலோ என்ற சிறுவனுக்கு காய்ச்சல் உள்ளது. சுகத்திற்காக ஜெபியுங்கள்.
- சரித்தா ஹந்தால், சொனா கிலோ ஆகியோரது காய்ச்சல் நீங்கும்படி ஜெபியுங்கள்.
- புதிதாக வரும் விசுவாசிகள் பிரச்சனைகள் வந்தாலும் கர்த்தரைவிட்டு பின் வாங்காமல், இரட்சிப்பில் நிலைத்திருக்கும்படியாக ஜெபியுங்கள்.
- சமிரா கலரி (வயது 3) என்ற சிறுமி இடது கை வலியினால் மிகவும் கஷ்டப்படுகிறாள். இந்த சிறுமியின் சுகத்திற்காக ஜெபியுங்கள்.
- ஒபந்தி சுனா என்ற சகோதரி சிறுநீரகம் பழுதாயிருந்தது. இதற்காக ஜெபித்தோம். இப்போது சற்று சுகமாக உள்ளார்கள். வாரத்திற்கு 2 முறை டயாலிஸிஸ் செய்யும்படி கூறியுள்ளனர். பரிபூரண

சுகத்திற்காக ஜெபியுங்கள்.

- ஸ்பர்ஜன் கிலோ என்ற சகோதரனுக்கு திருமணமாகி எட்டு வருடமாகிறது. குழந்தை பாக்கியம் இல்லை. தேவன் குழந்தை பாக்கியம் அருள ஜெபியுங்கள்.
- லபின் கிலோ என்ற சகோதரனுக்கு பக்கவாதம் ஏற்பட்டுள்ளது. பரிபூரண சுகத்திற்காக ஜெபியுங்கள்.
- அம்லான் சாகர், கிலுமணி சாகர் என்ற சகோதர்களுக்கு கண்வலி ஏற்பட்டுள்ளது. சுகத்திற்காக ஜெபியுங்கள்.

### சுவிசேஷ ஊழியம்

கொட்டாபர்ராம், ஜாஜ்பெலிங், கேபில், டிக்கராப்படா, பக்குலு சொந்தி, புஸ்புட், பொடஸ்புட், கொலாகுடா, சொயில்கரி, குதாகுடா, கொட்டிகுடா, பலாஸ்பதர், தர்லாபெடா, கொட்னிபதர், தெஜ்பாஸா ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்தோம். கைபிரதிகள் கொடுத்தோம். இக்கிராம மக்களின் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள்.

## நபரங்கபூர் மாவட்டம் உமர்கோட் பணித்தளம்

- ரோஹிம் பொரிச்சா என்ற சகோதரனுக்கு காய்ச்சலிலிருந்து கர்த்தர் சுகம் கொடுத்தார். தேவனுக்கே மகிமை.
- சொபாமா ஹரிஜன் தாயார் நெஞ்சுவலியினால் அடிக்கடி கஷ்டப்படுகிறார்கள். சுகத்திற்காக ஜெபியுங்கள்.
- லச்சுமண் ஹரிஜன் என்ற வயதானவர் வேலை பார்ப்பதற்காக ஹைதராபாத் சென்றுள்ளார். இவரை கர்த்தர் பாதுகாக்க ஜெபியுங்கள்.
- பருணோ ஹரிஜன், ராதாமா ஹரிஜன் என்ற வயதான தம்பதியினர் இந்த மழைக்காலத்திலும் மாடு மேய்த்து வருகின்றனர். இவர்களை கர்த்தர் ஆசீர்வதித்து பாதுகாக்க ஜெபியுங்கள்.
- தர்மீக்கா என்ற சகோதரிக்கு கர்த்தர் ஒரு குழந்தையை கொடுக்க ஜெபியுங்கள்.
- சுத்து சுனா என்பவர் ஆராதனைக்கு வருகிறார். இவர் இரட்சிப்பில் நிலைத்திருக்க ஜெபியுங்கள்.
- டிக்கோ சுனா என்ற சகோதரிக்கு அடிக்கடி வாந்தி ஏற்படுகிறது. சுகத்திற்காக ஜெபியுங்கள்.
- சுருமணி ஹரிஜன் என்ற சகோதரி கணவனால் கைவிடப்பட்டவர். இந்த சகோதரி ஜெபத்திற்கு வருகிறார்கள். இவர்களது கணவன் இவர்களை ஏற்றுக்கொள்ளும்படி ஜெபியுங்கள்.

### சுவிசேஷ ஊழியம்

**செம்லா பஞ்சாயத்து:**

பத்திலிகுடா, பொட்டுகுடா, செம்லா, நந்தாபெடா, பொடாபாசினி, சன்பாசினி, சிவுனாகுடா, ஆதிவாசி

**பாமினி பஞ்சாயத்து**

தாராகுடா, பத்ரப்பரா, பாமினி, பார்க்கோனா, குஞ்சாகுடா, தொர்ப்பாகுடா, டொங்கிரிகுடா, திசாகுடா, பட்டிபெடா, பொய்பாரிபதர் ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்தோம். இக்கிராம மக்கள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

# உலகச் செய்திகள்

1. அரசியல்வாதிகள் மீதான வழக்குகளை தாமாக விசாரணைக்கு எடுக்கும் தன்னை சிலர் வில்லனாக பார்ப்பதாகவும், லஞ்ச வழக்குகளை விசாரிக்கும் கீழமை நீதி மன்றங்களின் நடவடிக்கையை பார்க்கும் போது நீதித்துறையை ஆண்டவன் தான் காப்பாற்ற வேண்டும் என்றும் ஐகோர்ட்டு நீதிபதி என் ஆனந்த் வெங்கடேஷ் கருத்து கூறினார்.
2. ஒடிசா மாநிலத்தில் கடந்த 3 ஆண்டுகளில் மின்னல் தாக்கி 923 பேர் உயிரிழந்துள்ளனர். ஒடிசா மாநில அரசு மின்னல் தாக்குதலை மாநில பேரிடராக அறிவித்துள்ளது. 2021 - 2022ம் ஆண்டில் 281 பேர் பலியாகி உள்ளனர். பெரும்பாலும் கிராமப்புறங்களில் வயல்வெளிகளில் வேலை பார்க்கும் விவசாயிகளே அதிக அளவு மின்னல் தாக்குதலில் பலியாகிறார்கள். இவ்வாறு ஏற்படும் மின்னலால் ஏற்படும் உயிரிழப்புகளை தவிர்க்க, வனத்துறை மற்றும் வேளாண்மை துறைகள் அதிகஅளவில் பனை மரங்களை வளர்க்க ஒடிசா அரசு கேட்டுக்கொண்டுள்ளது.
3. மத்தியபிரதேசம், ராஜஸ்தான், தெலுங்கானா உள்ளிட்ட 5 மாநிலங்களுக்கான சட்டசபை தேர்தல் அறிவிப்பு அக்டோபர் மாதம் வெளியாகும் என கூறப்படுகிறது.
4. பாகிஸ்தானில் பெட்ரோல், டீசல் விலை வரலாறு காணாத அளவு உயர்ந்தது. பெட்ரோல் விலை ரூ.330ஐ தாண்டியதால் மிகுந்த அதிர்ச்சிக்குள்ளாகினர்.
5. மொராக்கோ நாட்டில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பலி எண்ணிக்கை 2 ஆயிரத்தை தாண்டியது. இதனால் அங்கு 3 நாட்கள் தேசிய துக்க தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**செய்திகளுக்காக ஜெபிப்போம்!**

## காணிக்கை அனுப்புவோர் கவனத்திற்கு...

உங்கள் காணிக்கைகளை M.O/ D.D / Cheque மூலமாக "CALVARY GOSPEL MISSIONARY MOVEMENT" என்ற பெயரில் அனுப்பவும்.

வங்கி முகவரி: **INDIAN OVERSEAS BANK**, SATTANKULAM, CALVARY GOSPEL MISSIONARY MOVEMENT.

Account No: **012401000017528.**

Branch IFS Code No: **IOBA0000124**

GPay **93378 19993**
**T.ASIR GNANARAJ**

## தொடர்பு கொள்ள வேண்டிய அலைபேசி எண்கள்

| | |
|---|---|
| கோவை | – 94865 88270 |
| சென்னை | – 81909 25800 |
| திருச்சி | – 94886 34482 |
| மேட்டுப்பாளையம் | – 81909 25800 |
| ஈரோடு | – 99434 46728, 88703 51741 |
| ஒசூர் | – 94869 19522, 93843 55239 |
| திருவள்ளூர் | – 94451 49642 |
| பெங்களூரு | – 94869 19522 |
| தாராபுரம், பொள்ளாச்சி | – 94865 88270 |
| வெள்ளகோவில் | – 94865 88270 |
| ஒட்டன்சத்திரம் | – 75984 03162 |

Owned and Published by: T.Asir Gnanaraj from 6/128, Mudalur, Toothukudi District - 628 702
and Printed by : G.David at Divine Offset, 116-C, New Western Building, Old Bus Stand, Tisaiyanvilai - 627657. Editor: T.Asir Gnanaraj.










லம்டாபுட் பணித்தளத்தில் உள்ள கிராமங்களில்
நடைபெற்ற சுவிசேஷ பணி.



Registered Newspaper RNI No. TNTAM/03/15637
Date of publication on 10.10.2023. Posted at Mudalur P.O., Tuticorin Dist. - 628 702 on 14th and 15th of every month.

## முதலூரில்...

# எழுப்புதல் உபவாச ஜெபம்





**நாள்:**

**07.10.2023**

முதல் சனிக்கிழமை
காலை 10 மணி முதல்
மதியம் 3 மணி வரை

**இடம்:**

எழுப்புதல் ஜெப மையம்,
முதலூர்.

**தேவ செய்தி:**

**சகோ. திருமலை பெருமாள்**
மெய் ஒளி ஊழியங்கள், மும்பை.

**சகோ. T. ஆசீர் ஞானராஜ்**

**தொடர்புக்கு: 9486588270**

*ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!! தேவாசீர்வாதம் பெற்றுச் செல்லுங்கள்!!!*

To,

If Undelivered Please return to
**Bro. T.Asir Gnanaraj**
Calvary Gospel Missionary Movement,
Mudalur, Tuticorin District - 628 702.
**Phone: 04639 - 261498**
**Mobile: + 91 96294 99532**